[12th September 1958

Sulphur

* 189 Q—SRI S. M. ANNAMALAI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள்தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், போளூருக்கு அருகில் கந்தகம் கிடைப் பது சர்க்காருக்குத் தெரியுமா ?

(ஆ) அப்படியாயின், அது விஷயமாய் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The investigations conducted by the Geological Survey of India have revealed that pyrrhotite, the magnetic sulphide of iron occurs in the Thaniyar Reserve Forest near Polur in North Arcot district. The reserves of the are have been estimated at 17,000 tons within a depth of 30 feet with an average content of 25 per cent sulphur. The investigations are to be continued.

SRI S. M. ANNAMALAI : இந்த கந்தகத்தை தோண்டி எடுப் பதற்கு டிரில்கள் வாங்குவதற்கு அமெரிக்காவுக்கு எழுதியிருப்பதாகச் சொன்னார்கள். அதற்கு எப்பொழுது பதில் வரும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒரு இடத்தில் இப்பொழுது டிரில்கள் வேலை செய்து முடித்திருக்கின்றன. பாக்கி இரண்டு இடங்களுக்கு டிரில்கள் வேண்டுமென்று முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். அமெரிக்காவுக்கு எழுதவில்லை. சாதாரணமாக நம்முடைய நாட்டில் இருக்கக்கூடிய டிரில்களை வைத்துத்தான் செய்வதாக இருக்கிறது.

Cremation and burial ground

*190 Q.—SRI P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ஜாதி ஹிந்துக்களுடைய சுடுகாட்டிலேயும், இடுகாட்டிலேயும் ஹரிஜனங்களுடைய பிரேதங்களை தகனம் செய்வதற்காகவும், அடக்கம் செய்வதற்காகவும் அனுமதிப்பது பற்றி பரிசீலனை செய்யும்படியாக 1955-ம் வருஷம் மார்ச்சு மாதம் சென்னை சர்க்காரால் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு எல்லா ஜில்லா கலெக்டர்களுக்கும் அனுப்பப்பட்டிருக் கிறதா ?

(ஆ) அவ்வாறு அனுப்பப்பட்டிருப்பின், அதன்மீது எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) A copy of the orders issued by the Government in the matter [a] is placed on the table of the House.

SRI P. G. MANICKAM : இந்த ஆர்டர் 1956-ம் வருஷத்தில் பிறப்பிக்கப்பட்டது. கடந்த இரண்டு வருஷங்களாக இந்த உத்தரவு பிர காரம் எத்தனை ஜாதி இந்துக்களுடைய சுடுகாடுகளிலும், இடுகாடுகளிலும் ஹரிஜனங்கள் புதைப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் ? மற்றும் இது விஷயமாக ஆங்காங்கு அதிகாரிகளுடன் என்னென்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI P. KAKKAN : அதுபற்றி தனியாக கேள்வி போட் டால் நான் பதில் சொல்ல முடியும்.

---

[a] Printed as Appendix I on pages 762–763 infr4.